**Publication: Tamil Murasu, p 2**
**Date: 28 February 2014**
**Headline: Cambodian women highly involved in community improvement**

# ஆக்ககரமான சமூக மாற்றத்தில் கம்போடிய பெண்கள் அதிக ஈடுபாடு

கனித்தா ஏஞ்சலா

தங்களுக்கு நேர்ந்துள்ள அவலங்களை வெளிப்படையாக தெரிவிக்க கலாசார கட்டுப்பாடுகளும் தடைகளாக இருப்பதாக மனித உரிமை ஆர்வாளர் திருமதி வினிதா ரமணி மோகன் (படம்) கூறினார்.

5ஆம் ஆண்டாக நடத்தப்படும் 'சமூகத்தில் பெண்கள்' எனும் ஆங்கில மாநாட்டில் திருமதி வினிதா நேற்று முக்கிய உரை நிகழ்த்தினார்.

அவர் கம்போடியாவில் நடந்த க்மெர் ரூஜ் இனப் படுகொலையால் பாதிக்கப்பட்ட பெண்களை க்மெர் ரூஜ் குற்றவியல் நீதி மன்றத்தில் பிரதிநிதித்ததன் அனுபவங்களைப் பகிர்ந்துக்கொண்டார்.

சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக் கழகத்தின் ஷிரின் ஃபாஸ்டார் மேம்பாட்டுத் திட்டத்தின் ஏற்பாட்டில் நேற்று தொடங்கிய இந்நிகழ்ச்சி சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தில் நடந்துக்கொண்டிருக்கிறது.

மார்ச் 1ம் தேதி வரை நடைபெறவிருக்கும் இந்த மூன்று நாள் மாநாட்டில் பெண்களுக்கு புத்தாக்கம், பன்மயம், ஒருங்கிணைப்பு போன்றவற்றில் முக்கியத்துவம் தருவதுடன் அவர்களைச் சிந்திக்க வைக்கும் நோக்கத்துடனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா, அமெரிக்கா, வியட்னாம், ஆஸ்திரேலியா, கம்போடியா போன்ற நாடுகளிலிருந்து பல பிரபல பேச்சாளர்களும் வந்துள்ளனர்.

மாநாட்டில் கலந்துக்கொள்ளும் 40 பேச்சாளர்களில் கிட்டத்தட்ட 10 பேர் சிங்கப்பூரைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் வெவ்வேறு தலைப்புகளில் பெண்களைப் பற்றிய அனுபவங்களையும் தகவல்களையும் பகிர்ந்து கொள்ளும் உரைகளை நிகழ்த்துவார்கள்.

சிங்கப்பூர் குடிமகளாக இருந்தாலும் கம்போடியாவில் நடந்த க்மெர் ரூஜ் இனப் படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கைகொடுக்க வேண்டும் என்ற ஆசை திருமதி வினிதா மோகனுக்கு வந்தது.



பல கம்போடிய பெண்கள் குற்றவியல் நீதிமன்றத்தில் அவர்களது அனுபவங்களை பகிர்ந்துகொள்வதாக இருந்தாலும் அவர்களை நேரடியாகப் பாதித்த பாலியல் வன்முறை போன்றவற்றை பற்றி அவமானம் காரணமாக அவர்கள் பேசுவதில்லை என்றார் திருமதி வினிதா.

ஆனால், இப்போது பெண்கள் அவற்றைப் பற்றி பேசி, நீதி கேட்பதால் அவர்களும் வலிமையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். ஆகையால், மற்ற மனித உரிமை தொடர்பான அமைப்புகளும் இப் பெண்களின் மனநிலையில் அக்கறை காட்ட வேண்டும் என்கிறார் வினிதா.

வாழ்க்கை முறைக்கும் கலாசாரத்திற்கும் ஏற்ப அனைவரும் வேறுபடுவதை அவரது உரையின் மூலம் விவரித்தார். கம்போடியாவின் பெண்களும் ஆக்ககரமான சமூக மாற்றங்களை ஏற்படுத்துவது எதிர்காலத்திற்கு சிறந்தது என்கிறார்.

இந்த நிகழ்ச்சி பெண்களின் சவால்களை அலசி ஆராய உதவியுள்ளது என்றும் வினிதா கூறினார்.